**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS. NO.53/2019**

| | |
|---|---|
| Name: **நாகராஜ்** | Caste: |
| Father's Name: **காசி**<br>Husband Name : | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| The Oath was administered to the witness by Tmt.L.Meerabai, Gr.III, BC and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 20.01.2026 | |

**20.01.2026**

**விசாரணை தொடங்கிய நேரம் 11.26 AM**

**வா.சா.1 – குறுக்கு விசாரணை**

நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கு சொத்து கிராம நத்தம் வகைப்பாட்டை சார்ந்தது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 258 / 22 என்றாலும் அதன் விஸ்தீரணம் 70 சதுர மீட்டர் என்றாலும் சரிதான். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள EXA-1 to ExA-4 ஆவணங்களும் இந்த வழக்கு சொத்தை சார்ந்தது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை நான் சொல்ல வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் நான் சொல்ல வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

வா.சா.ஆ,1 ஒப்படைப்பு நமுனா எனது தந்தையின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் படி கிழக்கு மேற்கு விஸ்தீரணம் 12 மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வடக்கு பக்கம் உள்ள கிழக்கு மேற்கு விஸ்தீரனமும் 12 மீட்டர் என்றால் சரிதான். கிழக்கு பக்கம் உள்ள வடக்கு தெற்கு விஸ்தீரணம் 4.4 மீட்டர் என்றால் சரிதான். மேற்கு பக்கம் உள்ள வடக்கு தெற்கு விஸ்தீரணம் 7.6 மீட்டர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது மனைவி பெயரில் தாவவிற்குரிய கணினி பட்டா என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்தின் கிழக்கு பக்கம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவர் பெயர் பட்டா தாக்கல் ஆகி உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கிழக்கு பக்கத்தில் பிரதிவாதியின் இடம் என்றால் சரிதான். தாவா சொத்தின் மேற்கு பக்கத்தில் அனுபவத்தில் நான் தான் உள்ளேன். தாவா சொத்தின் வடக்கு பக்கம் ரோடு உள்ளது. தாவா சொத்தின் தெற்கு பக்கத்தில் பிரதிவாதியின் இடம் உள்ளது என்றால் சரியல்ல. கிருஷ்ணசாமியின் பெயரில் பட்டா

தாக்கல் ஆகி உள்ளது. தெற்கு பக்கத்தில் உள்ள சொத்தின் சர்வே எண் 258 / 44 என்றால் சரியல்ல. 11 / 6 ஆகும். மேற்படி தெற்கு பக்கத்தில் உள்ள சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் 15 சென்ட் ஆகும். அது கிருஷ்ணசாமியின் உரிமையில் உள்ள சொத்தாகும். கிருஷ்ணசாமியின் தந்தை பெயர் எனக்கு தெரியாது.

பி.வா.சா.ஆ.1 ன் படி தாவா சொத்தின் தெற்கு பக்கத்தில் 11 / 6 என்ற சர்வே எண் இல்லை என்றாலும் 258 / 44 தான் உள்ளது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் மேற்கு பக்கத்தில் தங்கராஜுக்கு உரிமையான சொத்து என தாவா அட்டவணையில் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் அது கிராமநாத்தம் சொத்தாகும். தாவா சர்வே நம்பர் 258 என்பது கிராமநத்தம் சொத்தாகும் அதனை உட்பிரிவு செய்து பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

ஆதியில் சர்வே எண் 11/6 ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்ட இடம் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து அரசாங்கத்தால் எனது தந்தைக்கு ஒப்படைக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

**Selvi.R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**உத்திரமேரூர்.**